# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்
## அசல் வழக்கு எண். 134/2022

இன்று 2024 ம் ஆண்டு அட்டோபர் வியாழன் 17 ம் நாள் இன்று இந்த வா.சா.2ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : வேலுச்சாமி

தந்வர் பெயர் : மாரப்பன்

வயது :

தொழில் :

---

**முதல் விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.10. | எனது ஆதார் அடையாள அட்டை | அசலோடு ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நாச்சியப்ப கவுண்டரின் வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மகன் வழியில் நான் திருமணம் செய்துள்ளேன். நாச்சியப்ப கவுண்டர் எனது திருமணத்திற்கு முன்பே இறந்து விட்டதால் அவரைப் பற்றி நேரடியாக எனக்கு தெரியாது. எனக்கு திருமணம் 36 ஆண்டுகளுக்கு முன் நடந்தது. நாச்சியப்ப கவுண்டருக்கு 6 மகன்கள் 2 மகள்கள். நாச்சியப்ப கவுண்டரின் மகன்களான சின்னசாமி, பொன்னுசாமி, அருணாச்சலம், பழனிச்சாமி, கிட்டுசாமி,

ராமசாமி ஆகியோர்கள் இறந்து விட்டார்கள். மகள்களான பாப்பம்மாளும், சுப்பம்மாளும் இறந்து விட்டார்கள். 5 வாரிசுகள் பாப்பமாலுக்கு 4 வாரிசுகள், ராமசாமி கவுண்டருக்கு, 4 வாரிசுகள் கிட்டுசாமிக்கு 3 வாரிசுகளில், ஒருவர் இறந்து விட்டார் அவரது பெயர் குமாரசாமி பழனிச்சாமி, கவுண்டருக்கு 2 வாரிசுகள், சின்னசாமிக்கு 2 வாரிசுகள் பொன்னுசாமிக்கு 2 வாரிசுகள்.

2. சுபாதாளுக்கு ராமாத்தாள் என்ற மகள் உள்ளது என்றால் அவரை வழக்கில் சேர்க்கவில்லை. ராமாத்தாள் உயிருடன் தான் உள்ளார். எனது மாமனார் பெயர் கிட்டுசாமி எனது மச்சினனின் பெயர் கோபால்சாமி சொன்னதற்காக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோபால்சாமி சொன்னதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாரிசை விட்டுவிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.